PROCEEDINGS OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE PRIOR EVIRONMENTAL CLEARANCE UNDER ENVIRONMENTAL IMPACT ASSESSMENT NOTIFICATIONS 2006 ISSUED BY THE MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. ANANTRA GRANITES IN THE SURVEY NUMBERS: 202/2, 203/2A, 203/2B, 733/1, 733/3 & 733/5, LEASE OVER AN EXTENT OF 3.77.0 HA AT JAKKERI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT.

Name of the Project: Proposed mining project of Multi Colour Granite Quarry with an extent of 3.77.0 Hectares by the Unit M/s. Anantra Granites (Multi Colour Granite Quarry) In the Survey Numbers: 202/2, 203/2A, 203/2B, 733/1, 733/3 & 733/5, Jakkeri Village, Denkanikottai Taluk, Krishnagiri District.

Venue: M/s. K.P.L. Mahal, H-46, Ganesh Colony, Kelamangalam, Denkanikottai Taluk, Krishnagiri District – 635 113

Date & Time: **12.08.2026** – 11:00 AM

Present:

1.	Thiru.M.Palani	Assistant Commissioner, Prohibition and Excise Department, Krishnagiri District.
2.	Er.Purushothaman, B.Tech, M.E.	District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur
3.	Thiru. Aadal Arasu	The proprietor, M/s. Anantra Granites (Multi Colour Granite Quarry) In the Survey Numbers: 202/2, 203/2A, 203/2B, 733/1, 733/3 & 733/5, Jakkeri Village, Denkanikottai Taluk, Krishnagiri District.
4.	Thiru.K.Vijayaragavan	Field Expert member in the M/s. Geotechnical Mining Solutions, Dharmapuri for the Preparation of Environmental Impact Assessment (EIA) Report for this Project.
5.	Public and Environmentalists	56 Persons (List Enclosed as Annexure)

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Krishnagiri District has welcomed the Assistant Commissioner, Prohibition and Excise Department Krishnagiri District, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of M/s. Anantra Granites (Multi Colour Granite Quarry) In the Survey Numbers: 202/2, 203/2A, 203/2B, 733/1, 733/3 & 733/5, Jakkeri Village, Denkanikottai Taluk, Krishnagiri District has proposed to Mining project of Rough Stone and Gravel Quarry. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Hosur, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 11.05.2026. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Hosur. A public notice for the public hearing, scheduled on 12.08.2026, was published in *"The New Indian Express"* and *"Dhinathanthi"* on 08.07.2026 with the approval of the District Collector, Krishnagiri. This public hearing is for the proposed mining by M/s. Anantra Granites (Multi Colour Granite Quarry) and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study will be explained through a PowerPoint presentation by the project proponent/Expert involved in the study/preparation of the EIA reports. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, DEE has informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Assistant Commissioner, Prohibition and Excise Department, Krishnagiri District has requested the project proponent/Expert involved in the study/preparation of the EIA reports to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

Mr. K. Vijayaraghavan, Field Expert member for the Preparation of the Environmental Impact Assessment (EIA) Report, M/s. Geotechnical Mining Solutions, Dharmapuri, welcomed the Assistant Commissioner, Prohibition and Excise Department, Krishnagiri District, the District Environmental Engineer, environmental enthusiasts, government officials from various departments, and the general public who participated in the meeting. He then presented a detailed explanation of the proposed project through a visual presentation.

The Assistant Commissioner, Prohibition and Excise Department, Krishnagiri District has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

1. **Mr. Ashraf, Jekkery Village:**
    - ➢ He expressed his support for the proposed quarry project and stated that there would be no issues due to the operation of the quarry in the village.
    - ➢ He also mentioned that it would be beneficial if employment opportunities may be provided to the unemployed youth of the village.

2. **Mr. Jaipal, Jekkery Village:**
    - ➢ He supported for the proposed quarry project and stated that there would be no inconvenience caused by the operation of the quarry.
    - ➢ He requested jobs for local people, support for schools and temples, and help to the Panchayat for road construction.
    - ➢ He also suggested that suitable employment, such as security guard positions, could be provided to elderly persons.

3. **Mr. Sivakumar, Onnukurikki Village:**
    - ➢ He supported the proposed quarry project and stated that there would be no issues with setting up the quarry.
    - ➢ He requested that local people be given priority for employment opportunities.

4. **Tmt. Pradeepa, Jekkery Village:**
   - She supported the proposed quarry project and stated that there would be no issues with Establishing the quarry.
   - She said that the project would provide employment opportunities for everyone and therefore expressed her support for the quarry project.

5. **Mr. Dineshkumar, Jekkery Village:**

   He supported the proposed quarry project and requested that employment opportunities be provided to local people living around the quarry.

6. **Tmt. Thimmakka, Jekkery Village:**

   She requested that employment opportunities be provided to women.

7. **Tmt. Valliyammal, Jekkery Village:**

   She stated that she lives alone without a husband or children and requested assistance in this regard.

Thereafter no views/comments were received from the public.

Further, Written petitions were also received during the public hearing meeting regarding the proposed M/s. Anantra Granites (Multi Colour Granite Quarry).

The District Environmental Engineer (DEE), TNPCB, Hosur, summarized the responses of the public regarding the project and informed that these have been recorded through videography and will be submitted to the State Environmental Impact Assessment Authority, Tamil Nadu, along with the written representations received from the public.

Further, it was informed that a copy of the proceedings of this public hearing meeting will be made available for public reference at the Krishnagiri District Collectorate, Krishnagiri, Kelamangalam Panchayat Union Office, Denkanikottai Taluk Office, Jakkeri Village Panchayat Office and the Office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur. The same will also be uploaded on the Tamil Nadu Pollution Control Board website (www.tnpcb.gov.in).It was also stated that any comments on the proceedings may be submitted directly to the Member Secretary, State Environmental Impact Assessment Authority, Tamil Nadu.

Finally, the Assistant Commissioner, Prohibition and Excise Department, Krishnagiri District stated that any further comments, if any, may be submitted in writing as per the guidelines/procedure mentioned in the EIA Notification 2006.

District Environmental Engineer, **Tamilnadu Pollution Control Board,** **Hosur**	**Assistant Commissioner,** **Prohibition and Excise Department,** **Krishnagiri District**

District Collector
Krishnagiri District

<u>Enclosures:</u>

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 08.07.2026 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 07 & 56 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 03 Nos.

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், ஜெக்கேரி கிராமம், சர்வே. எண் 202/2, 203/2A, 203/2B, 733/1, 733/3 & 733/5,-ல் 3.77.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். அனந்த்ரா கிரானைட்ஸ் என்ற நிறுவனத்தார் உத்தேசிக்கப்பட்டுள்ள- பல வண்ண கிரானைட் கற்கள் வெட்டி எடுப்பது குறித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின், சுற்றுசூழல் தாக்க அறிவிக்கை 2006 கீழ் அவசியமான சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுதல் தொடர்பாக 12.08.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள்:

திட்டத்தின் பெயர்:	கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், ஜெக்கேரி கிராமம், சர்வே. எண் 202/2, 203/2A, 203/2B, 733/1, 733/3 & 733/5 ல் 3.77.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். அனந்த்ரா கிரானைட்ஸ் – பல வண்ண கிரானைட் கற்கள் குவாரி.
இடம்:	தி /ள். : K.P.L. மஹால் H-46, கணேஷ் காலனி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113.
நாள் மற்றும் நேரம் :	12/08/2026 – காலை 11.00 மணி

<u>பங்கேற்றோர்:</u>

1	திரு. மு.பழனி	:	உதவி ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கிருஷ்ணகிரி மாவட்டம்.
2	Er.வி.புருஷோத்தமன்,	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
3	திரு. ஆடலரசு	:	உரிமையாளர், தி/ள். அனந்த்ரா கிரானைட்ஸ் – பல வண்ண கிரானைட் கற்கள் குவாரி.
4	திரு.க.விஜயராகவன்	:	இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கும் வல்லுநர் குழு உறுப்பினர். தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி
5	பொதுமக்கள்	:	56 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது).

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள், சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய உதவி ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், ஜெக்கேரி கிராமம், தி/ள். அனந்த்ரா கிரானைட்ஸ் – வண்ண கிரானைட் கற்கள் குவாரி, சர்வே. எண் 202/2, 203/2A, 203/2B, 733/1, 733/3 & 733/5 ல் 3.77.00 ஹெக்டேர் பரப்பளவில் பல வண்ண கிரானைட் கற்கள் எடுப்பதற்க்காக

உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து, கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 11.05.2026 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள். அனந்த்ரா கிரானைட்ஸ் – பல வண்ண கிரானைட் கற்கள் குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், கெலமங்கலம், H–46 கணேஷ் காலனி, தி/ள் K.P.L. மஹாலில் 12.08.2026 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் என்று "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் "தினத்தந்தி" ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேடுகளில் 08.07.2026 அன்று பொது அறிவிப்பு

வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள். அனந்த்ரா கிரானைட்ஸ் – பல வண்ண கிரானைட் கற்கள் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கும் வல்லுநர் குழு உறுப்பினர், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

உதவி ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம், அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திரு.க.விஜயராகவன் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கும் வல்லுநர் குழு உறுப்பினர், தி/ள் ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் உதவி ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் உதவி ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. **<u>திரு. அஸ்ரப் ஜெக்கேரி கிராமம்.</u>**

முன்மொழியப்பட்ட இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததோடு ஊரில் குவாரி இயங்குவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும்

வேலைவாய்ப்பின்றி இருக்கும் கிராமத்து இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கினால் நன்றாக இருக்கும் என்றும் கூறினார்.

2. **திரு. ஜெய்பால் ஜெக்கேரி கிராமம்**

முன்மொழியப்பட்ட இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து குவாரி வருவதால் எந்தத் தொந்தரவும் இல்லை என்றார். உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு, பள்ளிக்கு உதவிகள், கோவில்களுக்கு நன்கொடைகள் மற்றும் பஞ்சாயத்திற்கு சாலை அமைத்தல் போன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் முதியவர்களுக்குப் பாதுகாவலர்கள் போன்ற வேலைகள் கொடுக்கலாம் என்றும் தன் கருத்தை தெரிவித்தார்.

3. **திரு. சிவகுமார் ஒன்னுகுறிக்கி கிராமம்**

முன்மொழியப்பட்ட இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து குவாரி அமைப்பதால் எந்த பிரச்சனையும் இல்லை உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

4. **திருமதி. பிரதீபா ஜெக்கேரி கிராமம்**

முன்மொழியப்பட்ட இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து குவாரி அமைப்பதால் எந்த பிரச்சனையும் இல்லை அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் ஆதலால் இக்குவாரி திட்டத்தை ஆதரிப்பதாக தெரிவித்தார்.

5. **திரு. தினேஷ்குமார் ஜெக்கேரி கிராமம்**

முன்மொழியப்பட்ட இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து குவாரி சுற்றி உள்ள உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

6. **திருமதி. திம்மக்கா ஜெக்கேரி கிராமம்**

பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கி உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

7. **திருமதி. வள்ளியம்மாள் ஜெக்கேரி கிராமம்**

தனக்கு கணவன், குழந்தைகள் என்று யாருமில்லாமல் தனியாக வாழ்வதாகவும் இதுகுறித்து உதவ வேண்டும் என்றும் கூறினார்.

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.

இதன்பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள், திட்டம் குறித்து பொதுமக்கள் கூறியதை தொகுத்து சுருக்கமாக கூறினார். மேலும், இப்பொதுமக்களின், ஆலோசனைகள் வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு ஒலி மற்றும் ஒளி வடிவில் அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும், இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக கிருஷ்ணகிரி மாவட்ட

ஆட்சியர் அலுவலகம் – கிருஷ்ணகிரி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தேன்கனிக்கோட்டை தாலுகா அலுவலகம், ஜெக்கேரி கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஓசூர், ஆகிய இடங்களில் வைக்கப்படும். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அவர்களுக்கு நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஓசூர், அவர்கள் கூறினார்.

இறுதியாக, உதவி ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு, 2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளின்படி, கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் அவை எழுத்து மூலமும் சமர்ப்பிக்கலாம் என தெரிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
ஓசூர்

உதவி ஆணையர்,
மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
கிருஷ்ணகிரி மாவட்டம்

மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 08.07.2026).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (07 பக்கங்கள் 56 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 03 மனுக்கள்.